(3) அறிவிப்பு.

1974-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1974-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவு.

1974-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, 1974-ம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இச்சட்ட முன் வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(5) நடைமுறைக் கேள்வி.

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்குத் தேர்தல் நடத்துவது குறித்து

திரு. க. உரொ. எட்மண்ட்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, பேரவையினுடைய துணைத் தலைவர் இந்த மாதம் 9-ந் தேதி தன்னுடைய பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார்கள். அவர்கள் பதவியை ராஜிநாமா செய்து ஏறத்தாழ 12 நாட்கள் ஆகின்றன. நம்முடைய சட்டமன்ற விதிமுறைகளின் பிரகாரம் துணை சபாநாயகர் தேவை. உடனடியாகத் துணைத் தலைவரை தேர்ந்தெடுப்பதுபற்றி தலைவரவர்களே அறிவிக்க வேண்டுமென்று சட்டமன்ற விதிமுறைகள் இருக்கின்றன. இதற்கு முன்னாலே